முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.241/2022

2024 வது ஆண்டு பிப்பிரவரி மாதம் 26-ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.மணிகண்டன் | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ /த.பெ | திரு.பாலகிருஷ்ணன் | கிராமம் | |
| வயது | 39 | மதம் | |

<u>26.02.2024 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 12.02.1986 தேதியிட்ட கணபதி பாலகிருஷ்ணனுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.1. 12.02.1986 தேதியிட்ட சங்கரன் பாலகிருஷ்ணனுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.2. 28.05.2013 தேதியிட்ட உயில் வா.சா.ஆ.3. 02.09.2020 இறப்பு சான்று வா.சா.ஆ.4. 06.05.2022 தேதியிட்ட இறப்பு சான்று வா.சா.ஆ.5. 20.05.2022 தேதியிட்ட ரசீதுகள் வா.சா.ஆ.6. 30.04.2022 தேதியிட்ட புகார் வா.சா.ஆ.7. 01.05.2022 தேதியிட்ட புகார் வா.சா.ஆ.8. 03.05.2022 தேதியிட்ட புகார் வா.சா.ஆ.9. 18.05.2022 தேதியிட்ட புகார் வா.சா.ஆ.10. 27.05.2022 தேதியிட்ட வாதி கொடுத்த பதில் மனு வா.சா.ஆ.11. (வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)